செய்தித் தாளாகப் பதிவு பெற்றது. வெள்ளிக்கிழமைதோறும் வெளிவருவது.

உ
சிவமயம்

# இந்துசாதனம்

சைவபரிபாலன சபை வெளியீடு. பிரதி விலை: சதம் 15
ஆரம்பம்: விரோதி ஞு (1889) ஆவணி மீ 28 உ. அச்சகம்: சைவப்பிரகாசயந்திரசாலை, 450 காங்கேசன் துறைவீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 356

புத்-அட] யாழ்ப்பாணம்:- விரோதிகிருது ஞு பங்குனிமீ ௪ உ வெள்ளிக்கிழமை (17-3-1972) [இலஂ-சக

# சௌபாக்கிய கௌரி விரதம்

## பங்குனித்திங்கள் 4-ஆம் நாள் 17-3-72 விரதம் அநுட்டித்துப் பயன் பெறுக

[வடகோவை "சித்தாந்தபாநு"
சிவஸ்ரீ. சோ. சுப்பிரமணியக் குருக்கள் அவர்கள்]

சாந்திரமான சித்திரைப் பிரதமையடுத்து வரும் வெள்ளிக் கிழமையன்று இவ்விரதம் ஆரம்பித்து அனுட்டிக்கப்படும். இவ் விரதத்தை அனுட்டிக்கும் கன்னிகைப் பெண்கள் நல்ல கணவனைப் பெறுதல், சகல சௌபாக்கியங்களையும் பெறுதல், நல்வாழ்வை வாழுதல் போன்ற நற்பலன்களை அடைவார்கள். முற்காலத்திலே சுக்கிரன் இதனை அனுட்டித்து தன் பெயரால் இவ்விரத நாள் உலகத்தோரால் அனுட்டிக்கப்பட்டு வரவேண்டுமென்று பார்வதி தேவியிடம் வரம் பெற்றுக் கொண்டான். மகாலக்ஷ்மி தேவியார் இவ்விரதத்தை அனுஷ்டித்து காத்தற் கடவுளாகிய திருமாலைத் தன் நாயகனைப் பெற்றுக்கொண்டாள். சரஸ்வதி தேவி இவ் விரதத்தை அனுட்டித்து நான்கு வேதங்களிலும் வல்லவரான பிரமதேவரைத் தன் நாயகனாகப் பெற்றாள்.

**இவ் விரதத்தை அனுட்டிக்கும் முறையாவது:**

அவ்விரத நாளிலே வைகறைப் போதில் துயிலெழுந்து பார்வதி தேவியாரை மனதிலே தியானம் செய்து அதன்பின் சுத்தமான தீர்த்தத்திலே ஸ்நானஞ் செய்து நித்திய கருமங்களை முடித்து விதானம், மலர்மாலை முதலியவற்றால் அலங்கரிக்கப்பட்ட மண்டபத்திலே, மேடையிலே பட்டை விரித்து வேத விதிப்படி கும்பத்தை அமைத்துப் பார்வதி தேவியாரைக் கும்பத்திலே ஆவாகித்துப் பூசை வழிபாடுகளைச் செய்து பால், சர்க்கரை சேர்ந்த பாயச அன்னம் நிவேதித்து எட்டு பிராம்மணப் பெண்களை வரவழைத்து அவர்களைப் பார்வதி தேவியாராகப் பாவித்துப் பூசித்துச் சேலை, இரவிக்கை, தட்சணை முதலியன கொடுத்து அல்லது ஒருவரையேனும் இவ்வாறு பூசித்து அதன்பின்னர் பார்வதி தேவியாரின் ஆலயத்தை அடைந்து அங்கு நெய்த்தீபம் முதலியவற்றை ஏற்றி அர்ச்சனை வழிபாடு செய்து, கோவில் வலம்செய்து வணங்கிப் பின்பு இல்லத்திற்குப் போய் ஒருவேளை பால், பழ உணவு உட்கொள்ளுதல் அல்லது ஒருவேளை அன்னம் புசித்தல் முறையாம். இவ்வாறு ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் வருஷம் முழுவதும் நோன்பு நோற்றல் வேண்டும். இதுவே இவ்விரதத்தை அனுட்டிக்கும் முறையாம்.

இவ்வருடம் **பங்குனித் திங்கள் 4-ஆம் நாள் (17—3—72) வெள்ளிக்கிழமை** இவ்விரதம் வருகிறது. சைவ மங்கையர் இவ் விரதத்தை இயன்றவாறு அனுட்டித்துப் பயன் பெறுவாராக.

சுமங்கலி பூஜை வருடம் ஒருமுறை தொடங்கிய நாளில் செய்யலாம்.

[இவ்விரதானுட்டானங்கள் தெலுங்கு தேசத்தில் மிகுதி போதிய நூல்கள் கிடைக்கவில்லை, உபதேசகாண்டத்தை ஆதாரமாகக் கொண்டு எழுதப்பட்டது.]

### காஞ்சிபுரம் மெய்கண்டாராதீனத் தலைவர்

## வழங்கும் பட்டங்கள்

ஈழத்துச் சிதம்பர புராணத்தைச் சிறப்பாகப் பாடி அரங்கேற்றிய புலவர்மணி சோ. இளமுருகனாருக்கு 'கவிசிந்தாமணி' யென்னும் பட்டத்தையும், ஷை நூலுக்கு சொற்சுவையுடன் மரபு தவறாமல் உரையெழுதிய புலவர்மணி அவர்களின் பாரியார் அவர்களுக்கும் 'பேருரையரசி' என்னும் பட்டத்தையும், இப்பொழுது ஈழத்தில் சைவ சித்தாந்தநூல்களுக்கு நுண்பொருள் விளக்கம் புரிந்துகொண்டிருக்கும் காஞ்சிபுரம் மெய்கண்டாராதீன மகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாச பரமாச்சாரிய சுவாமிகள் வழங்கியுள்ளார்கள்.

சைவசித்தாந்த நூல்களையும், சைவத் தெய்வத்திருமுறைகளையும் வெளியிட்டு பெரும்பணி புரிகின்ற சைவத் திருவாளர் சி. சிவகுருநாதன் அவர்களுக்கு "சித்தாந்தபாஸ்கரன்" என்ற பட்டத்தையும் ஷை சுவாமிகள் வழங்கியுள்ளார்கள்.

குறிப்பிட்ட பெரியார்கள் மேலும் தொடர்ந்து சைவத் தொண்டுபுரிய இப்பட்டமளிப்பு உபகாரமாயிருக்கும்.

—0—

உ
திருச்சிற்றம்பலம்

வருந்தான்காண் மனமுருகி
நினையா தார்க்கு
வஞ்சன்காண் அஞ்செழுத்து
நினைவார்க் கென்றும்
மருந்தவன்காண் வான்பிணிகள்
தீரும் வண்ணம்
வானகமும் மண்ணகமும்
மற்று மாகிப்
பரந்தவன்காண் படர்சடையெட்
டுடையான் றான்காண்
பங்கயத்தோன் தன்சிரத்தை
யேந்தி யூரூர்
இரந்தவன்கா ணெழிலாரும்
பொழிலார் கச்சி
யேகம்பன் காணவனென்
னெண்ணத் தானே

திருச்சிற்றம்பலம்

- திருநாவுக்கரசு சுவாமிகள்.

### அரியாலைச் சிவன்கோயில்


## அலங்காரத் திருவிழா

அரியாலை, ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலயத்திற்கு அருகாமையிற் கோயில்கொண்டிருக்கும் திருவாகேசப் பெருமானுக்கும் இராஜ இராஜேஸ்வரி அம்பாளுக்கும் வருடந்தோறும் நடைபெற்று வரும் அலங்கார உற்சவம் இவ் வருடம் பங்குனி மாசம் 6-ஆந் திகதி (19-3-72 ஞாயிற்றுக் கிழமை ஆரம்பமாகி 11 நாட்கள் நடைபெறும். நண்பகலில் அபிஷேகமும், இரவில் 8-30 மணிக்கு வசந்த மண்டபப் பூசையும் தொடர்ந்து வெளிவீதி உற்சவமும் நடைபெறும். பங்குனி 15-ஆந் திகதி செவ்வாய்க்கிழமை இரதோற்சவமும் அடுத்தநாள் தீர்த்தோற்சவமும் காலையில் நடைபெறும்.

ந. நி

# சைவ சமய வேள்வி

## சிவ பிரஹ்ம மிருத்யுஞ்ஜய மஹா யக்ஞம்



யாக ரக்ஷகர்
ஸ்ரீமத் சிவானந்த முனிசிரேட்ட ஞானாசாரிய சுவாமிகள்

இடம்: நல்லூர் திவ்விய ஜீவன சங்க மண்டபம்.
(சட்டநாதர் கோவிலுக்கு அருகாமையில்)
காலம்: 16-3-72 உதயம் 5-00 மணிக்கு ஆரம்பம்.

**21-3-72- இல் மகாபூர்ணாகுதி**

திரு. ச. சூரசங்கரன் திரு. எஸ். கனகரத்தினம், திரு கே. ஞானச்சந்திரன் ஆகியோரை உறுப்பினராகக் கொண்ட வேள்விக் குழுவின் பொறுப்பில் நடைபெறுகின்றது.

# மரவரி ஒழிப்பு நாட்டுக்கு நலன் தரும்

## பூரண மதுவிலக்கை ஆதரிக்கிறோம்

மரவரி ஒழிப்பினால் நாட்டில் குடிப்பழக்கம் குறையும், பனம் பொருள் ஆராய்ச்சி மூலம் நவமான தொழில்களை உருவாக்குவதற்கு நல்ல வாய்ப்புகளும் உண்டாகும் என்பதுவே, நிதி அமைச்சருக்கு காந்தி சேவா சங்கம செய்து கொண்ட சமர்ப்பணம்

(முன் வளர்ச்சி — 2)

மேற்கூறிய நல்விளைவுகளோடு இன்னுமொரு சிறந்தபயன் உண்டாவதற்கும் வழிபிறக்கும். 'பனம் பொருள் தொழில் அபிவிருத்திக்கு வாய்ப்புக் கிடைப்பதே அதனாற்பெறும் பயன் ஆகும்.

பனைசம்பந்தமான மூலப்பொருள்கள் பலவற்றையும் அடிப்படையாகக் கொண்ட பயன்மிகு தொழில் விருத்தியை உருவாக்குவதாகும். ...... பனை வெல்லம், பாணிவகைகள் மதுரபானங்கள், ரொபி வகைகள், கயர் போக்கிய ஒடியல் மா போன்ற

(வளர்ச்சி 4-ஆம் பக்கம்)

### லக்ஷார்ச்சனை

புலோலி பசுபதீஸ்வரன் கோயிலில் இவ்வர்ச்சனை பிரமஸ்ரீ க சாம்பசிவக் குருக்கள் அவர்களைத் தலைவராகக் கொண்டு நடத்தப்பெறும். 20-3-72 தொடக்கம் 10 நாட்களுக்கு நடைபெற்று பங்குனி உத்தரத்தன்று நிறைவுபெறும்.

திருச்சிற்றம்பலம்

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம் வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாம் அரன் நாமமே சூழ்க வையக முந் துயர் தீர்கவே.

திருச்சிற்றம்பலம்

# இந்துசாதனம்

விரோதிகிருது வருடம் பங்குனி மீ ௪-௨ வெள்ளிக்கிழமை [1972

## கல்வித் துறையில் மாற்றங்கள்

சென்ற பல ஆண்டுகளாக நாட்டில் பிள்ளைகளுக்கு ஊட்டப்படும் கல்வி ஆங்கிலேயர் புகுத்திய கல்விமுறையைப் பின்பற்றியே இயங்கி வந்தது. ஆங்கிலேயர்கள் தங்கள் அரசாட்சிக்கு உதவி புரியக்கூடிய இலிகிதர்களையும் மற்றும் உத்தியோகஸ்தர்களையும் பெறும்பொருட்டே பெரும்பாலும் தங்கள் கல்வி முறையை நிருவகித்து வந்தார்கள். இலங்கை சுதந்திரமடைந்த பின்பும் ஆங்கிலேயர் விட்டுச்சென்ற கல்வி முறையே கையாளப்பெற்று வருகின்றது. பிள்ளைகளெல்லாரும் உத்தியோகம் பெறும் நோக்கத்துடனேயே கல்வி பெற விரும்புகின்றனர். வருடந்தோறும் பாடசாலைகளில் மாணவர் தொகையும் அதிகரித்துக்கொண்டு வருகின்றது. பாடசாலைப் படிப்பை முடித்துக்கொண்டு வெளியேறுகின்ற பிள்ளைகள் யாவரும் உத்தியோகத்தை நாடுகின்றனர். அரசாங்கமும் இவர்களெல்லாருக்கும் உத்தியோகம் உதவ முடியாத நிலைமையிலிருக்கின்றது. அரசாங்கம் தேவைக்குத் தக்கபடி ஒரு சிறு பகுதியினருக்குத்தான் உத்தியோகம் கொடுக்க முடியும். உத்தியோகத்தைப் பெறாத இளைஞர்கள் மனக் கவலையுடன் காலத்தைக் கழிக்கின்றார்கள். அவர்கள் சீவியமும் பெற்றோருடைய பொறுப்பாக வருகின்றது. இவ்விதம் உத்தியோகம் பெற இயலாத மாணவர்கள் சிலரே நாட்டில் குற்றச் செயல்களிலீடுபடுகின்றனர். கலவரங்களை உண்டுபண்ணுகின்றனர்.

எதிர்கால இளைஞர்களுடைய நன்மையைக் கருதி அரசாங்கம் கல்வித்துறையில் சில முக்கியமான மாற்றங்களைக் கொண்டுவந்துள்ளது. அவற்றுள் முக்கியமாயுள்ளது தொழில் முறைக் கல்வியைப் புகட்டுவதாகும். பாடசாலை தாபிக்கப்பட்டிருக்கின்ற சுற்றாடல்களிலுள்ள தொழிற்சாலைகளுக்குப் பிள்ளைகளை அழைத்துச் சென்று அங்கங்குள்ள தொழில்கள் செய்யும் முறையைக் கூறல். விவசாயம், தொழில் நுட்பக்கலை முறைகளைப் பயிற்றுதல்.

சாதாரண தராதரப் பத்திரப் பரீட்சை வரைக்குப் மாணவர்களுக்கு ஒரே விதமான பாட வகைகளே கற்பிக்கப்படும். கலைப் பகுதி, விஞ்ஞானப் பகுதி என்ற பிரிவுகளில்லை. உயர்தர விஞ்ஞானப் பாடங்கள் சாதாரண தராதரப் பத்திரப் பரீட்சையிற் சித்தியெய்திய பின்பே ஆரம்பிக்கப்படும். சர்வகலாசாலைப் பிரவேசத்திற்கு முன் அல்லது உத்தியோகம் பெறுவதற்கு முன் ஒவ்வொரு மாணவனும் இரண்டு வருடத்துக்கு தேசீய சேவை புரிய வேண்டும். கைத்தொழில், சமூக சேவை, விவசாயம் முதலானவை இதனுள் அடங்கும். வேலையில்லாத் திண்டாட்டத்தைக் குறைப்பது தொழில் செய்வதில் மதிப்புண்டு என்ற உணர்ச்சியை ஊட்டுவது நாட்டின் செல்வத்தைப் பெருக்குதல் போன்ற நன்மைகள் இப்புதிய கல்வித்திட்டத்தினால் உண்டாகுமென எதிர் பார்க்கப்படுகின்றது.

x x x

## உயர்மனு நீதிமன்றம்

இங்கிலாந்திலுள்ள உயர் நீதிமன்றம் (Privy Council) புரிந்த கடமையை எதிர்காலத்தில் இலங்கையில் இப்பொழுது நிறுவப்பட்டிருக்கும் உயர் நீதிமன்றம் புரியக்கூடிய ஒழுங்கை அரசாங்கம் புரிந்துள்ளது. இங்கிலாந்திலுள்ள உயர்மனு நீதிமன்றம் சென்ற 139 வருடங்களாக நமது நாட்டுக்குச் சேவை செய்தது. உயர்நீதிமன்ற உறுப்பினராக சட்ட நூற்கல்வியும் விவேகமும் நடுநீதியும் வாய்ந்தவர்களே கடமையாற்றினர். அவர்களுடைய தீர்ப்புக்கள் சட்டநூற்கல்வி பயில்பவர்களுக்கு பெரும் உதவிபுரியக் கூடியவை.

இப்பொழுது இலங்கையில் தெரிவுசெய்யப்பட்டிருக்கும் உயர்மனு நீதிமன்றம், நீதியரசர் கௌரவ ஸ்ரீ T. S. பொனுண்டோ அவர்கள் தலைமையில், நீதியரசர் ஸ்ரீ A L ஸ்ரீமானே அவர்களையும், நீதியரசர் கௌரவ. ஸ்ரீ V. சிவசுப்பிரமணியம் அவர்களையும் நீதியரசர் கௌரவ G T. சமரவிக்ரம அவர்களையும் உறுப்பினராகக் கொண்டு இயங்கும். மூவரும் சட்டநூலறிவும், நீதியரசர்களாகக் கடமையாற்றிய அனுபவமும் சன்மார்க்கமும் நிறைந்தவர்கள். ஸ்ரீமான் V சிவசுப்பிரமணியம் அவர்கள் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரிப் பழைய மாணவன், கடவுள்பக்தி அடியார் பக்தியிற் சிறந்தவர் இலங்கை ஆறுமுகநாவலர் சபையினது தலைவராகவும், இலங்கை இந்துசமய ஆலோசனைச் சபைத் தலைவராகவும் இந்துமாமன்றத் தலைவராகவும் சமயத் தொண்டும், தமிழ்மொழித்தொண்டும் புரிந்து வருகின்றனர். யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி பழைய மாணவர்சங்கக் காரியதரிசியாக இவர் கடமையாற்றிய காலத்தில் பள்ளிக்கூட அபிவிருத்திக்கு அரிய சேவைகள் செய்தனர் அக் கல்லூரிக் குமாரசுவாமிமண்டபம் நிறைவேறுதற்கு உறுதுணையாகவிருந்தனர்.

> "சமன்செய்து சீர்தூக்குங் கோல்போ லமைந்தொருபாற்
> கோடாமை சான்றோர்க் கணி"

என்ற வள்ளுவரின் குறளுக்கு இலக்கணமாக வாழ்கின்ற நீதியரசர்களுடைய தொண்டும் சிறக்குக.

## இந்து மாமன்றம்
### பதினேழாவது ஆண்டுக் கூட்டம்

### கலைக்களஞ்சியம் வெளியிடுதல் சைவானுட்டான முறைகளைப் பரப்புதல் சம்பந்தமான பிரேரணைகள்

மேற்படி கூட்டம் 26—3—72 ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெறும். சென்ற ஆண்டறிக்கை, வரவு செலவு கணக்கு வாசித்தல், புதுவருட அதிகாரசபை தெரிதல், பிரேரணைகளைத் நிறைவேற்றுதல் ஆகிய நிகழ்ச்சிகள் இடம்பெறும்.

[எதிர்வரும் இந்து மாமன்ற வருடாந்தக் கூட்டத்தில், கொழும்பு, சைவப் பெரியார் சு. சிவசுப்பிரமணியம் அவர்கள் கீழ்வரும் தீர்மானங்களைப் பிரேரிப்பதற்கு அறிவித்தல் கொடுத்திருக்கின்றனர்.]

அகில இலங்கை இந்து மாமன்றம் கீழ்க்கண்ட யோசனைகளைத் தெரிவிக்கின்றது. இந்து சமய முன்னேற்றத்துக்குப் பொதுவாக இந்து சமய அறிவை உலக மக்களுக்குப் பரப்புவதற்கும் ஒரு இந்துக்கலைக்களஞ்சியத்தை வெளியிடுவது விரும்பத்தக்கதும் அவசியமானதும் என்று கருதுகிறது. இதை நிறைவேற்றுவதற்கு ஒரு வேலைத் திட்டத்தை வகுத்து அதை நிறைவேற்ற வேண்டிய நடவடிக்கைகளை எடுக்கும்படி அதன் ஆலோசனைச் சபையைக் கேட்டுக்கொள்கிறது.

2. இந்து சமயத்தை முன்னேற்றும் முகமாக ஒவ்வொரு இந்துக் குடும்பத்தவர்களும் தங்கள் சமய அனுட்டானம் அநுசரிப்பதற்கு வசதியாயிருக்கவேண்டிய பொருட்களின் பட்டியல் ஒன்று தயாரிக்க வேண்டும். இப்படித் தயாரிக்கும்பொழுது இந்து சமயப் பற்றுள்ள பிரமுகர்களையும், தாபனங்களையும் கலந்து அவர்கள் கருத்துக்களையும் ஆராய வேண்டும்.

3. இந்து சமயத்தை முன்னேற்றும் முகமாக ஒவ்வொரு இந்துக் குடும்பமும் தனது சமய அனுட்டானம் அநுசரிப்பதற்கு வைத்திருக்க வேண்டிய சமய நூல் பட்டியலொன்று தயாரிக்க வேண்டும். இது தயாரிப்பதில் இந்து சமய பற்றுள்ள பிரமுகர்களையும், தாபனங்களையும் கலந்து அவர்கள் கருத்துக்களையும் ஆராயவேண்டும்.

4. இந்துசமய கலாசாரத்தை அபிவிருத்தி செய்ய கல்வி ஸ்தாபனங்களில் இந்து சமய உண்மைகளைக் கற்கவும், சமய அனுஷ்டானத்தைப் புரியவும் தேவையான ஏற்பாடுகளைச் செய்ய தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்துமாமன்றம் விரும்புகிறது.

### அடைவு நகை ஏல விற்பனவு விளம்பரம்

கொக்குவில் மேற்கு, ஆனைக்கோட்டை றோட், திரு செ. வி. கனகசபை அவர்களிடம் 1-1—71 திகதிக்கு முன் வைத்த அடைவு நகைகளில் மீட்கப்படாதவை 1972ம் ஆண்டு ஏப்பிரல் மீ (7-4 72) வெள்ளிக்கிழமை முற்பகல் 9-30 மணி தொடக்கம் மேற்படி அடைவு கடையில் வைத்து பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

வி. செ. குட்டிப்பிள்ளை
ஏலவிற்பனவாளர்

"இராசகிரி",
643, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்

எம். 418 17, 24—7—72

## போதனையிலும் சாதனையே சிறந்தது

"மாசி உத்தர தினத்திலேயே திருவள்ளுவர் தினம் கொண்டாடவேண்டியது. இதுவே நாவலர்பெருமானின் கருத்துமாகும். அத்தினத்திலே வள்ளுவர் குருபூசையை நாவல்நகர் இந்து வாலிபர் சங்கம் கொண்டாடுவதில் பெருமையடைகின்றது" என்று நாவல்நகர் இந்து வாலிபர் சங்கத் தலைவர் திரு அ. சபாபதிப்பிள்ளை அவர்கள் குருபூசை விழாவின் தலைமை உரையில் கூறப்பட்டார்.

திருக்குறளை முதன் முதல் அச்சுவாகனமேற்றி அதனை மக்களின் பொதுநூலாக்கியபெருமை நாவலர் பெருமானுக்கே உண்டு. ஈழத்திலே பெரும்பான்மையாக இருப்பவர்கள், பௌத்தர்களும், இந்துக்களுமாகும் இரு சமயங்களும் கொல்லாமையும் புலால் உண்ணாமையும் ஆதரிக்கின்றன. வள்ளுவர் கருத்தும் இதுவே.

> கொல்லான் புலாலை
> மறுத்தானைக் கைகூப்பி
> எல்லா உயிரும் தொழும்'

கொல்லாமையைப் பற்றி நாளும் சமயப் பெரியார்கள் போதிக்கின்றார்கள். வருடா வருடம் மகாநாடுகளில் தீர்மானங்களை நிறைவேற்றுகின்றார்கள். ஆனால் நடை முறையில் இதைக் கைக்கொள்கிறவர்கள் மிகச்சிலரே. ஈழத்தில் இலங்கையரால் நடாத்தப்படும் சகல வசதிகளுமுள்ள சைவவிடுதிகள் (ஹொட்டல்கள்) தேடினும் கிடைக்காது. பௌத்தர்களுக்கும் இந்துக்களுக்கும் இது ஒரு அவமான நிலை, பெருவெட்கம்.

அண்மையில் நடைபெற்ற நாவலப்பிட்டி மாரியம்மன் ஆலய திருவிழாக் காலங்களில் நாடோறும் சமய போதனைகள் நிகழ்ந்தன. மாமிசவுணவை அறுத்துக்கொண்டு விழா நிகழ்ச்சிகளில் கூசாமல் மக்கள் பங்கு பற்றுகிறார்கள். இதைவிடப் பெரும்பாதகம் வேறொன்றிருக்க முடியுமா? 2000 வருடங்களுக்கு முன்பே வள்ளுவர் சமதர்மம் பேசியிருக்கிறார்.

> 'இரந்தும் உயிர் வாழ்தல்
> வேண்டின்
> பரந்துகெடுக உலகியற்றியான்'

இன்று சமதர்மத்திற்கு கஷ்டப்பட்டு உழைப்பவர்களிடம் இருந்து அபகரித்து சூதாடிகளுக்கும் சோம்பேறிகளுக்கும் இலவசப் பங்கீடு செய்வது தவறு. வறுமைக்குக் காரணம் கூறுகின்றார்கள். இத்தகைய சமதர்மம் மக்களைப் பிச்சைக்காரர்களாகவே செய்துவிடும். இந்த முறையான சமதர்மம் பூண்டோடு அழியதாக.

திரு. கிரிதாரி பிரசாத் அவர்கள் வள்ளலார் கண்ட வாழ்வு' என்னும் விடயம்பற்றி உரையாற்றினார். செயலாளர் திரு ஆர். தங்கவேல் நன்றியுரை கூறினார்.

## திருமுறைப் பண்ணிசைக் கச்சேரி

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபை ஆதரவில் சபை நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் 19-3-72 ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணிக்கு தருமபுரம் ஆதீன பிரதான ஓதுவார்மூர்த்தியும் திருபுவனம் தேவஸ்தானத்தைச் சேர்ந்த உயர்திரு. T. சாமிஐயா தேசிகர் அவர்கள் திருமுறைப் பண்ணிசைக் கச்சேரியை பாகவாதத்துடன் நிகழ்த்தி நடைபெறவிருக்கின்றது.

# நால்வர் நல்வாக்கு

[ கைதடியில் நடைபெற்ற 8வது சைவமகாநாட்டில், கோட்டடிமை ப்புலவர் திரு க சிற்றம்பலம் (சித்த வைத்தியர்) அவர்கள் "நால்வர் நல்வாக்கு" என்னும் பொருள்பற்றிப் பேசிய சொற்பொழிவின் சாரம் ]

(முன் வளர்ச்சி -2)

"வாழிய மாமறைப் புற்றிடங்
கொள்
மன்னவன் ஆரருளால்
ஓர் வாசகந்
தோழமையாக உமக்கு நம்மைத
தந்தனம், காப்பும் பூண்டு
கொண்ட
வேளவியில் அன்று நீ
கொண்ட கோலம்
என்றும் புனைந்து நின் வேட்கை
தீர
வாழி மண்மேல் விளையாடுவாய
என்று
ஆரூரர் கேட்க எழுந்ததன்றே"

இப்படியாக இறைவன்வாயிலாகக்கொண்ட தோழமையைச் சுந்தரர் கூறிக்காட்டும் வகையைக் கண்டின்புறலாகும். சுந்தரர் தான் பாடிய திருப்பாடல்களில என்னுடைய தோழனுமாய் என்று உரிமைக்குரல் எழுப்புவதைக் காணக் கிடக்கின்றது.

ஏழிசையாய் இசைப்பயனாய்
இன்னமுதாய் என்னுடைய
தோழனுமாய் யான் செய்யும்
துரிசுகளுக்கு உடனாகி
மாதொருபால் பரவையொடு
தந்து ஆண்டவனை மதியிலா
ஏழையேன் பிரிந்திருக்கேன்
என் ஆரூர் இறைவனையே

என்று நட்புரிமைபற்றித் தோழமை கொண்டு தொண்டு செய்யும் வகையைக் காணக் கிடக்கின்றது.

மாணிக்கவாசகருக்கும் இறைவனுக்கும் உள்ள தொடர்பு சன்மார்க்கத் தொடர்பாகும். இறைவன் குருவடிவாக வந்து, தனது அஞ்ஞான இருள் களைந்து மெய்ஞ்ஞானப் பேரொளியை விளங்கச் செய்த வகையை சிவபமணக்கும் திருவாசகத்தால்,

அருபரத் தொருவன் அவனியில்
வந்து
குருபரனாகி அருளிய பெருமை
யைச்
சிறுமையென் றிகழாதே திருப்
'கோகழியாண்ட குருமணிதன்

தாள் வாழ்க' என்றும் கூடல்இலங்கு குருமணி போற்றி என்றும் மற்றும் ஆங்காங்கு 'என்னுடைக் குருமணியே' என்றும் பல பல இடங்களில் இறைவனைக் குருவாகக் கொண்டமை சொல்லிக் குறிப்பிடுவதை நாம் திருவாசகத் தேனமுதத்தில் சுவைத்து உணர்ந்து கொள்ளலாம். இவ்வாறு தந்தையாகவும், தலைவனாகவும், தோழனாகவும், குருவாகவும் சிவத்தோடு சம்பந்தப்படுத்தி பத்திநெறி வளர்த்து, முத்தியடையச் செய்யும் நால்வர் நல்வாக்குகள் காணக்கிடப்பதை திருமுறைகள் மூலம் காட்டுகிறேன். அவை முத்தி நெறிக்கு வழிகாட்டுவதைக் காணக்கிடக்கிறது.

தந்தை நிலையிலே சிவனை வைத்து ஞானசம்பந்தர் காட்டும் நல்வாக்குகள் சற்புத்திரமார்க்கமாகிய கிரியையால் சாமீபமும் தலைவனாக்கொண்டு பந்தணும் தாசமார்க்கமாகிய சரியையால் நாவுக்கரசர் காட்டும் சாலோகத்தையும் நண்பனாக சுந்தரர் காட்டும் சகமார்க்கமாகிய சமீபத்தையும் குருவாக இறைவனை காட்டும் நலவாக்குகள் சன்மார்க்க நெறியாகிய ஞானவொழுக்கமாய்ச் சாயுச்சியத்தையும மன்னுயிர்கள் இறைவனை அடையும் மார்க்கங்களாக நால்வர் நல்வாக்குகளும், அருள்புரிய வகைசெயவோமாக.

இதையே அருணந்தி சிவனாரும், சன்மார்க்கம், சகமார்க்கம், சற்புத்திரமார்க்கம், தாசமார்க்கம் என்றும சங்கரனை அடையும் நன்மார்க்கம் அவைதாம். ஞானயோக நற்கிரியை, சரியையென நவிற்றுவதும் செய்வர் சன்மார்க்க முத்திகள் சாலோப சாமீபிய சாயுச்சியம் என்று சதுர்விதமாம் முன்மார்க்க ஞானத்தால் எய்தும் முத்தி முடிவென்பர். மூன்றினுக்கும முத்தி பதம் என்பர் என்று திருமறையின் தத்துவங் கூறும் சைவசித்தாந்தச் சொத்துவ கொத்து நெறிபடுத்துகின்றார். நல்வர்களும தனித்தனியாகக் கூறுகின்ற நல்வாக்குகளிடம் யாமும்கலந்து களிப்போமாக

(வளரும்)

---

அணிந்துரை
அரங்கம்

## பிரார்த்தனைத் தோத்திரங்கள்

தேவாரம் — கோளறு பதிகம்
வித்துவான், பண்டிதமணி
ந. சுப்பையாபிள்ளை
அவர்களால
பார்வையிடப்பட்டது.
வெளியிடுவோர்:
மில்க்வைற்சோப் தொழிற்சாலை
யாழ்ப்பாணம்.

திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் வேதாரணியத்தில் தங்கியிருந்த காலத்தில் மங்கையர்க்கரசியார்; குலச்சிறையார் ஆகிய இருவருடைய விண்ணப்பத்துக்கிரங்கி பாண்டிநாடு சென்று சமணவிருளைப் போக்கிச் சைவசமயத்தாபனஞ் செய்யப்புறப்பட்டபொழுது திருநாவுக்கரசு நாயனார் "பிள்ளாய் அமணர்கள் மகாகொடியவர்கள், தேவரீரோ சிறுபிள்ளை, அன்றியும் உமக்கு நாளும் கோளும் வலியில்லை ஆதலால் தாங்கள் செல்லுவதற்கு உடன்படேன்" என்றார் அதனைக் கேட்ட பிள்ளையார் "பாண்டிநாடு சென்று சைவசமயத்தாபனஞ் செய்வேன், விபூதியின் ஒளியினைப் பரப்புவேன், சிவனடியார்களுக்கு நாளும், கோளும் நல்லனவாகும்" என்று கூறி 'வேயுறு தோளி பங்கன்' என்ற தேவாரப் பதிகத்தைப் பாடித் துதித்துவிட்டுச் சென்றனர். பாண்டிநாடு சென்று திருநீற்றின் பெருமையை விளக்கித் திரும்பினர். இப் பதிகத்தை நாடோறும் ஓதுகின்றவர்கள துன்பங்களை அடையார்

'தானுறு கோளும் நாளும்
அடியாரை வந்து
நலியாத வண்ணம்
உரைசெய்
ஆனசொல் மாலையோதும்
அடியார்கள் வானில்
அரசாள்வர் ஆணை நமதே"

என ஞானசம்பந்தப் பெருமானே ஓதுகின்றவர்கள அடையும் பேற்றைக் கூறியிருக்கின்றார்

யாழ்ப்பாணம் "மில்க்வைற் சோப்" ஸ்தாபனத்தாரின் ஞாலமெல்லாம் சிவனருள் பெருகச் செய்யும் இத் தொண்டு பாராட்டத்தக்கது.

---



சந்தான சௌபாக்கிய கௌரி

## மங்கல தீப ஏற்று விழா

நிகழும் விரோதிகிருது ஆண்டு பங்குனித் திங்கள் 4-ஆம் நாள் 17-3-72 வெள்ளிக்கிழமை சௌபாக்கிய கௌரி விரத தினமாகையால் அன்றைய தினத்தில் மேற்படி தீபம் ஏற்றுவிழா யாழ் நாயன்மார்கட்டு ஸ்ரீ இராஜராசேசுவரி பேய்ச்சியம்பாள் கோயில் சந்நிதானத்தில சிறப்புற நிகழத் திருவருள் கூட்டியுள்ளது.

நிகழ்ச்சிகள்:

பங்குனி மீ 3-ஆம் நாள் (16-3-72) வியாழக்கிழமை மாலை 6-00 மணி
விசேட பூசை, ஆராதனை, வழிபாடு, பஜனை.
இரவு 7-0 மணி ஷை ஆலய பரிபாலன சபை உப தலைவர் திரு. சு. பரநிருபசிங்கம B Sc அவர்கள் தலைமையில பிரசங்கம் நிகழும்
விஷயம: (1) "சௌபாக்கிய கௌரி விரத மகிமை"
(2) "நமிநந்தியடிகள் நாயனார் அருள் வாழ்க்கை"

பிரசாரகர்கள்:
'சித்தாந்த சிரோமணி' மு மயில்வாகனம் அவர்கள்
ஆசிரியர் "இந்துசாதனம்" (சைவ பரிபாலன சபை, யாழ்ப்பாணம்)
ஆசிரியர் திரு. ச. சதாசிவம (ஷை ஆலய பரிபாலனசபை-திருப்பணிச்சபை)
சௌபாக்கிய கௌரி மங்கல தீபச் சிறப்புப்பற்றிய பாடல் பாராயணம்
திரு. க. சொக்கலிங்கம B A. [சொக்கன்] அவர்கள்.
தலைவர், யாழ். நாயன்மார்கட்டு, சைவ சமய அபிவிருத்திக் கழகம்.
பங்குனி மீ 4-ஆம் நாள் 17-3-72 வெள்ளிக்கிழமை முற்பகல் 9-00 மணி தொடக்கம் திரு. சி பொன்னம்பலம அவர்கள (அரியாலை, ஸ்ரீ சித்தி விநாயகர் கோவில் மனேசர்) தலைமையில மங்கல தீபம் ஏற்றும் விழா ஆலய வழிபாட்டுடன ஆரம்பமாகும.
யாழ். இந்துக்கல்லூரி அதிபர் திரு இ. சபாலிங்கம அவர்களும் பாரியாரும் கௌரி மங்கல தீபத்தினை ஏற்றி ஆரம்பித்து வைப்பார்கள்.

இத் தீபம் யாழ். நாயன்மார்கட்டு காலஞ்சென்ற, வைத்திய கலாநிதி க. குகதாசன அவர்களது நினைவாக, அவரது பாரியார் ஸ்ரீமதி கு திலகநாயகி அவர்களால் நிறைவு செய்விக்கப்பெற்று, மேற்படி ஆலய பரிபாலன சபை வசம ஒப்புவிக்கப்பெற்றது.

இங்ஙனம்,
**அம்பாள் ஆலய பரிபாலனசபை.**

ஸ்ரீ இராஜராசேஸ்வரியம்பாள் தேவஸ்தானம,
நாயன்மார்கட்டு, யாழ்ப்பாணம, 12-3-72.

---


AUCTION SALE

## கோட்டு கொமிஷன் விற்பனவு விளம்பரம்

பருத்தித்துறை டிஸ்திறிக் கோட்டில் இல: 10784

1. தொண்டமானாறு வாசி, கதிரிப்பிள்ளை ஐயர் ஆறுமுகசாமி ஐயர் —வழக்காளி

எதிராக

கெருடாவில் வாசி, மூத்ததம்பி பொன்னுத்துரை —எதிராளி

மேற் குறித்த இலக்க வழக்கின் தீர்வைப்படியும் குறித்த கோட்டால் எமக்குக் கிடைத்த கொமிஷன் அதிகாரப்படியும் இதன் கீழ் விபரிக்கப்படும் ஆதனத்தை 1972ம் ஆண்டு சித்திரை 22ம் திகதி (22—4—72) சனிக்கிழமை முற்பகல் 9 மணி தொடக்கம் குறித்த ஆதனமிடமிருந்து எனனால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வடமராட்சிப்பகுதி உடுப்பிட்டிக் கோவிற்பற்று கெருடாவில் குறிச்சியிலுள்ள "புனைக்கலட்டி" வி. பர. 14 இதில் வடக்குப் புறமாக வி. பர 4 நீக்கி மிகுதி கு வி. பர 10 எல்லை கிழக்கு ஒழுங்கை, வடக்கு இட்டணபிள்ளை கைலாசபிள்ளை பெண் மீனாட்சிய மாவுக்குரிய வாதனம. மேற்கு ஐயாமுத்து இராசையாவுக்கும் மற்றும் பேருக்குமுரிய வாதனம. தெற்கு மாரிமுத்துத்தம்பி பெண் சரஸ்வதிக்குமற்றும் பேருக்குமுரியவாதனம் இவ்வெல்லைக்குட்பட்ட நிலம். டனைகள் வடலிகள். வீடு. அடங்கலும்

இக்காணியின மதிக்கப்பட்ட விலை ரூபாய் 2000/00

| | |
|---|---|
| தீர்வைத்தொகை | ரூபா 7120 00 |
| 28 1-70 தொடக்கம் 23-4-70 வரை ரூபா 4300/-க்கு 10 வீத வட்டி | 111 00 |
| 23-4-70 தொடக்கம 3-2-70 வரை ரூபா 7231/-க்கு 5 வீதவட்டி | 1024 00 |
| | 8255 00 |
| கொடுபட்டதொகை | 150 00 |
| கொடுபடவேண்டிய தொகை | 8105 00 |

புலோலி மேற்கு, க. நா. சுப்பிரமணியம்
புலோலி, 16-3-72. கொமிசனரும் விலைமதிப்பாளரும்
419-72



## கோட்டு விற்பனவு விளம்பரம்

வேலணை மேற்கைச் சேர்ந்த
1. வேலுப்பிள்ளை இராமநாதனும் மனைவி 2 சிவசையும்
வழ: இல. M B 11002 எதிராக —வழக்காளிகள்

வேலணை மேற்கைச் சேர்ந்த
1. கணபதிப்பிள்ளை சொர்ணலிங்கமும்
2. தாமோதரமபிள்ளை கணபதிப்பிள்ளையும் மனைவி
3. இராசம்மாவும
—எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 11002-ம் இலக்க வழக்கில எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விவரிக்கப்படும் துண்டுக்காணிகள் 1972ம் ஆண்டு வைகாசி மீ 8-ம திகதி (8 5—72) திங்கட்கிழமை முற்பகல 10-30 மணி தொடக்கம அந்தந்தக் காணிகளுக்குள நின்று பிரசித்த ஏலத்தில விற்கப்படும.

தீர்வைத்தொகை:— முதல் ெட்டி ரூபா 3861/-ம், 30-7-69 தொடக்கம 16-8 70 வரைக்கும் ரூபா 1950/-க்கு 12 வீத வட்டியும் அதன்பின முழுத்தொகைக்கும இறுக்கும் வரை 5 வீத வட்டியும கோட்டுச் செலவு ரூபாய 372 சதம 92

ஆதன விபரம்

1, வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தீவுப் பற்றுப் பகுதி வேலணை கோவிற்பற்று வேலணை மேற்கிலுள்ள 'மயிலனாபருத்தி' பர, நில, இலா 12ம், வேம்புரம. எல்லைகள்: கிழக்கு சுப்பையா முத்தையாவினுடையதும், பங்காளர்கள வைத்தியநாதர் வல்லிபுரத்தினுடையதும் மனைவி பூமணியினுடையதும, சேமசேகரம சொர்ணலிங்கத்தினுடைய ஆதனங்கள். வடக்கு: சண்முகம் மனைவி திலகவதியினுடைய ஆதனம, மேற்கும, தெற்கும ஒழுங்கை, இதடங்கலும்,

2, ஷை வேலணை மேற்கு இறை கொட்டியிற் பிரிவு பா, நே, இலா, 4ம, பனை ஞம, வடலிகளும், எல்லைகள கிழக்கு ஒழுங்கை, வடக்கு கணபதிப்பிள்ளை பெண் இராசம்மாவினுடைய ஆதனம, மேற்கு வல்லிபுரம பெண் பூரணத்தினுடைய ஆதனம, தெற்கு: பொன்னம்பலம கனகரத்தினத்தின ஆதனம, இதடங்கலும்

107, பெரியதெரு, எ. பி. பி. எதிர்மன்னசிங்கம்
யாழ்ப்பாணம், வெந்திஸ் கொமிஷனரும் விலைமதிப்பாளரும்
13—3—72 எம். 417 17-3-72

# மதுவரி ஒழிப்பு

(1-ம் பக்கத்து வளர்ச்சி)

பொருள்களை விஞ்ஞான ரீதியாக உற்பத்தி செய்து வளம்பெருக்கும் முயற்சியில் இக்கூட்டுறவுச் சங்கங்கள் ஈடுபடலாம். விஞ்ஞானத் தொழில் நுட்ப நிபுணர்களுடைய ஆலோசனை, செயல்முறைப் பயிற்சியுதவிகள், கடன் உதவி முதலிய தொழில்விருத்திச் சகாயங்களையெல்லாம் இக்கூட்டுறவுச் சங்கங்கள் அரசாங்கத்தினிடமிருந்து எளிதிற் பெற்றுக்கொள்ளும் வாய்ப்புகளும் கிடைக்கும். எனவே, இவ்வாறு இக்கூட்டுறவுச் சங்கங்கள் விரிவான தொழில் துறைகளில் ஈடுபட்டு வளரவளர வாலிபர்களுக்குத் தொழில வாய்ப்புகளும் பெருககம் அடையும் என்பது குறிப்பிடப்படவேண்டியதாகும்.

முடிவில், ஒன்று கூற விரும்புகின்றோம். பூரண மதுவிலக்கே எங்கள் சங்கத்தின் குறிக்கோள் ஆனல் ...............

எங்கள் இலக்ஷியத்தை நோக்கிச் செல்லும பாதையில், தங்கள் திட்டம் ஒரு முன்னேற்றமான படியென்பதில் எங்களுக்கு ஒரு திருப்தி.

— காந்தியம் 1972.

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

வழ: இல. M B 11058

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றம்
கோப்பாய் தெற்கைச் சேர்ந்த அப்பாகுட்டி அருளம்பலம் — வழக்காளி

எதிராக

10/2 ஐயனர் கோவில் வீதி, வண்ணார்பண்ணையைச் சேர்ந்த, T. S. துரைராசா, —எதிராளி.

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்ற M B 11058-ம் இலகக வழககில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக காணி 1972-ம் வருடம் சித்திரை மாதம் 25 ம் திகதி (25-4-72) செவ்வாய்க்கிழமை முற் பகல் 10-30 மணியளவில் என்னுல் அக் காணிகருள் வின்று பிரதத ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:- முதலும் வட்டியும் ரூபா 11,671-65 சதமும் 24-8-69 தொடக்கம் 20-11-69 வரைக்கும் 9400/— ரூபாவிற்குப் 10 வீத வட்டியும் 20-11-69 தொடககம் இறுக்கும் வரை முழுத் தொகைககும 5 வீத வட்டியும கோட்டுச்செலவு ரூபா 495-97 சதமும் ஆகும் இதில் 1700/— ரூபா கொடுபட்டுள்ளது.

### ஆதன விபரம்

வட மாகாணம் யாழ்ப்பாணம் மாவட்ட பிரிவைச்சேர்ந்த வண்ணார்பண்ணை கோவில்பற்று வண்ணார்பண்ணைத் தென்மேற்கு நாவலடி "கொககன் காடு பறக காடு" என்று சொலப்படும் நிலப் பரப்பு நாலும் அதனைச் சேர்ந்த வீடும் கிணறும் வான் பயிர் செய் பயிர்களும் இதில் அடங்கும்.

எல்லை கிழக்கு டாக்டர் எஸ் துரையப்பாவின் ஆதனம்; எல்லை வடக்குதெருவும், எல்லை மேற்கு ரி. எஸ். துரைராசா (எதிராளி) வின் ஆதனம். எல்லை தெற்கு துரையப்பா அண்ணுமலையின் ஆதனம்.

சி. ஆ. த வடிவேலு J. P.
கொமிஷனரும் விலைமதிப்பாளரும்
ஏல விற்பனையாளரும்

"வடிவேல் உதயம்"
காங்கேசன்துறை வீதி,
கோண்டாவில். 7-3-72.

எம். 412. 17-3-72.

---

## COMMISSION SALE
## கோட்டுக்கொமிஷன் விற்பனவுவிளம்பரம்

பருத்தித்துறை டிஸ்திறிக் கோட்டில் வழக்கு இல, 10936

வல்வெட்டி, நல்லதம்பி சுப்பிரமணியம் —வழக்காளி

எதிராக

வல்வெட்டி
1, கந்தையா கணபதிப்பிள்ளை
2. பெண செல்லப்பாக்கியம
3. சின்னத்துரை சிவராசா
4, பென அழகரத்தினம் —எதிராளிகள்

மேற்குறித்த இலக்க வழககில் தீர்ந்த தீர்வைப்படியும குறித்த கோட்டால எனககுக் கிடைத்த கொமிஷன அதிகாரப்படியும் இதன்கீழ் விபரிக்கப்படுமாதனம் 1972ம் ஆண்டு சித்திரை மீ 29-ம் திகதி (29—4—72, சனிக்கிழமை முற்பகல் 10 மணி தொடககம் குறித்த காணியிடமாகவிருந்து என்னுல் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழப்பாணம் டிஸ்திறிக் வடமராட்சிப் பகுதி உடுப்பிடடிக் கோவிற்பற்று இமையாணன் குறிச்சயிறை 'புனனை நின்ற செம்பாடு' தோட்டம் 2 ஷை நி பர 44, 3/8 இப்பிரிவுகளில் தென் கிழக்குப புறமாக நி பர. 15½ இதுவும சமரபாகுதேவன் குறிச்சயிறை துரையன்செம்பாடு' நி. பர. 42¼ ஷை நி பர 6, 3/8 இப்பிரிவுகளில் தென மேற்குப் புறமாக நி பர 2 குளி 1, 1/8 இதுவும ஒரே துண்டுகூடியது நி. பர. 17, குளி 10, 1/8 இது உலாந்தா யேஸ்தர் ப. சீவரத்தினம அவாகளால் 18-7-1957 இல 1744ம் இலககத்தில் விந்தாரிக கப்பட்ட படத்தினபடி 1 தொடககம 9 முடியவுள்ள இலககத துண்டுகள் விசாலம் நி. பர 17 குளி 5, 27/32 இதில் குறத்த படத்தில 3ம் துண்டுக்கு நி. பர 2 குளி 11, 23/32 எல்லை கிழககு 7ம் துண்டு, வடக்கு 2ம துணடு, மேற்கு முருக கந்தசாமிக்குரிய ஆதனம தெற்கு இததுண்டுக்கும, 1ம், 2ம், 4ம் துண்டுகளுக்கும் முழுக்காணிககுத் தெற்கப் புறமாயுள்ள முருகர் கந்தசாமிககும் மனைவிசகுமுள்ள விரவதரனை நி. பர. 8 குளி 15 கொண்ட காணிககும் பொதுப் பாவிபபுக்காக விடப்பட்ட 6ம் இலககததுணடொழுங்கை நிலம். இவ்வெலலைக்குட்பட்ட நிலம கல்வீடு மற்றுமடஙகலும 5ம துணடுககுளிருககுங் கிணற்றிலும் தூர்வை நிலத்திலும் மற்றுமதைச் சேர்நதவைகளிலும் இதற்குரிய பங்கும் வழிவாய்ககாலுமிரித்தும பொதுப் பாவிப்புககாக விடப்பட்ட 6ம், 7ம இலகக ஒழுங்கைத துணடுகளினுரித்தும்.

தீர்வைததொகை: ரூபா 2497-50 இதில் ரூபா 1500/-க்கு 30—5—1970 தொடக்கம 25 8—1970 வரைககும 12 வீத வட்டியும் அதன பின் முழுத்தொகைக்கும் இறுபடும்வரையும் 5வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 244-16 இது வழக்காளி பேருககு ரூபாய் 1000/-க்குமதற்கு 12 வீதவட்டிக்கும் ஆறு வருட வீதம வட்டி கொடுபபின 10 வீத வட்டிககுமுளள முன ஈட்டுககு அமைவாகவுள்ளது. இதில் 1ம், 2ம வருடஙகளுக்குக கொடுபட்ட வட்டி குறைவாகவுளளது.

R. S. இராமநாதன்
கொம்மிசனரும், விலைமதிபபாளரும
ஏல வற்பனையாளரும

"உமாபதி"
நெலலண்டை ரேட்டு,
தும்பளை, பருத்தித்துறை: 13-3-72

எம். 416-72

---

## Commission Sale
## கோட்டுக்கொமிஷன் விற்பனவு விளம்பரம்

பருத்தித்துறை டிஸ்திறிக் கோட்டில் வழ: இல. 11244

1. வள்ளிப்பிள்ளை கைம்பெண் தப்பு
2, சின்னம்மா மகன் வேலன் இருவரும்
கரணவாய் வடக்கு, —வழக்காளிகள்

எதிராக

1. காதியன் செல்லையா
2. பெண சின்னுச்சி இருவரும், சமரபாகுதேவன்குறிச்சி
3. இளையவன் சின்னத்தம்பி, வல்வெட்டி —எதிராளிகள்

மேற்குறித்த இலக்க வழக்கின் தீர்ந்ததீர்வைப்படியும குறித்த கோட்டால் எனக்குக் கிடைத்த கொமிஷன் அதிகாரப்படியும் இதன்கீழ் விபரிக்கப்படுமாதனத்தை 1972-ஆம் ஆண்டு மே மீ 3-ம் திகதி (3—5—72) புதனகிழமை முற்பகல் 9-30 மணி தொடக்கம் குறித்த ஆதனத்திடமாகவிருந்து என்னுல் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும.

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழப்பாணம் டிஸ்திறிக் வடமராட்சிப் பகுதி உடுப்பிட்டிக கோவிற்பற்று சமரபாகுதேவன் குறிச்சியிறை 'கீரிபல்லி' கி. பர. 45½ இதில் வடகிழககுப் மக்கமாக கி. பர. 2¾ நீககி மிதுதிக்கு நி பர. 42¾ இதில் தெற்குப் புறமாக மூன்றிலொரு பங்குக்கு கி. பர. 7, 1/8 எல்லை கிழககு ஒழுங்கை, வடககு சக்கரன் துரையனுககும் மறுபேருக்குமுடையவாதனம் மேற்கு கந்தவனம் பெண் அன்னப்பிள்ளைக்கும மறுபேருககுமுடையவாதனம். தெற்கு சரவணை பெண் சிதேவனுக்குடையவாதனம். இவ் எல்லைக்குட்பட்ட நிலம், படனைகள், வடலிகள் அடங்கலும். மதிபபிட்ட விலை ரூபாய் 178.00/-

| | |
|---|---|
| தீர்வைததொகை: | 4,387 50 |
| வட்டி ரூபா 3000/-க்கு 10 வீத வட்டி 10-2-71 தொடககம் 9-7-71 வரை | 125 00 |
| வட்டி ரூபா 4,512-50கக்கு 5 வீத வட்டி 10-7-71 தொடக்கம 22-12-71 வரை | 94 00 |
| | 4606 50 |
| கொடுபட்டது | 2000 00 |
| | 2606 50 |
| வட்டி ரூபா 2,606-50க்கு 5 வீதப்படி 22- 2-71 தொடக்கம் 3-5-72 வரை | 47 42 |
| செலவுத் தொகை | 318 43 |
| மொத்தம் ரூபா | 2,972 35 |

'குமரகோட்டம்'
வியாபாரி மூலை,
பருத்தித்துறை. 11—3—72

ந. முத்துலிங்கம்
நீதிமன்ற ஆணையாளர், விலைமதிப்பாளர்,
ஏல வற்பனையாளர்

415 17-3-72

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம மாவட்ட நீதிமன்றம்

வழக்கு இலக்கம்: M B 8709

கண்டி வீதி, சுண்டிககுளி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த
1. டாக்டர் நாகலிங்கம் கந்தசாமியும
2. மனைவி வடிவாம்பிகையும் —வழக்காளி

எதிராக

தற்பொழுது இல: 1, வாக்கர் வீதி போகெக் ஆசம்ரைப் பிங்பெளுக, மலாயாவில் வசிககும் இல: 23 முதலாம் குறுக்குத் தெரு யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த,
1. பொன்னம்பலம் ராசாவும்
2. அவரின் மனைவி புவனேசுவரியும் —எதிராளி

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்ற M B 8709ம் இலகக வழக்கில் எனக்கு கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிககப்படும ஒரு துண்டுக்காணி 1972ம் ஆண்டு சித்திரை மீ 26ம் திகதி (26—4—72) புதன்கிழமை முற்பகல் 10-30 மணி தொடககம் என்னுல் அக்காணிககுள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:— முதலும் வட்டியும் ரூபாய் 8172/-ம் 27—12—1966 தொடக்கம் 6—7—1970 வரைககும் 6000/- ரூபாவிற்கு 12வீத வட்டியும் அதன்பின் முழுகதொகைக்கும் இறுக்கும் வரை 5வீத வட்டியும கோட்டுச்செலவு ரூபாய் 527 – 80 சதமும் ஆகும்.

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்பபாண மாவட்டம் யாழ்ப்பாணப் பிரிவைச் சேர்ந்த வண்ணார்பண்ணை கோவிற்பற்று வண்ணார்பண்ணைத் தென் கிழககிலுளள 'கலுதாறுதன் தலைமடை' என்று சொல்லப்படும் நிலப்பரபபு 2ம் அதனைச் சேர்ந்த கல்லால் கட்டப்பட்ட கடை, வீடு, மற்றைய கட்டிடங்களும், இந்த ஆதனம் உத்தரவு பெற்ற உலாந்தா எஸ். ஏகாம்பரததனுல் 20-10-1923 இல் தயாரிககபபட்ட படததில் 2வது துண்டாகக் காட்டப்பட்டபடி எல்லை கிழககு முதலாம் குறுக்குத் தெருவும், எல்லை வடக்கு ஆஸ்பத்திரி வீதியும், எல்லை மேற்கு ராமு சின்னத்தம்பியின் ஆதனமும், எல்லை தெற்கு பஸ்தியாம்பிள்ளை டானியல் யோசப்பன் ஆதனமுள்ளன. பதவு இலககம் D 270/1-2

'வடிவேல் உதயம்''
காங்கேசன்துறை வீதி,
கோண்டாவில,
7-3-72.

சி. ஆ. த. வடிவேலு, J. P.
கொமிஷனரும, விலைமதிப்பாளரும்
ஏலவிற்பனையாளரும்.

எம் 413 17—3—72

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம டிஸ்திறிக் கோட்டில்

வழ: இல. M B 12033

சுளிபுரம் நடுக்குறிச்சி, சுளிபுரம். இலங்கநாதர் கந்தசாமி —வழக்காளி

எதிராக

கனகசபை அவன்யு, வண்ணார்பண்ணை கிழக்கு, யாழ்பபாணம்,
சுப்பிரமணியம் கனகசபை கைம்பெண் நாகம்மா —எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 12033-ம் இலக்க வழக்கில எனககுக கிடைதத கோட்டுக கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும மூன்று துணடுககாணிகள் 1972-ம் ஆண்டு சித்திரை மீ 29-ம திகதி (29-4-72) சனிககிழமை முற்பகல் 10 மணிககு முதலாம் காணியும், வைகாசி மீ 2-ம திகதி (2—5—72) செவ்வாய்ககிழமை முற்பகல் 10 மணிக்கு இரண்டாம் காணியும், முறபகல் 10-30 மணிககு மூன்றும காணியும், அந்தந்தக் காணிகளுககுள் நின்று என்னுல் பிரசுதத ஏலததில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபாய் 31200/- இன்னும் ரூபாய் 25000/-த்துககு 29—9—70 தொடககம் 19—7—71 வரைககும் 10 வீத வட்டியும் அதன்மேல் முழுததொகைக்கும் இறுககும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபாய் 550 – 27 சதம்

### ஆதனங்களின் விபரம்

வடமாகாணம் யாழப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் மேற்குப்பிரிவு பண்டத்தரிப்பு கோவிற்பற்று சிறுவிளானிறை 'கம்பயப்புலம்' பர. நில. இலா 5 இதல் பர. நில. இலா. ½யை நீக்கி மிகுதி பர. நில. இலா. 4½யும் ஷை 'கம்பயப்புலம்' பர. நில. இலா. 17 – 0 இவ்விரு 'கம்பயப்புலம்' துண்டுகளுமாக கூடி பர. நில. இலா. 21½ இதற்கெல்லை கிழககும் வடககும் புதிய ரோட்டு மேற்கு மரியநாயகம் மறுநாமம் பொன்னையா பெண் சுவனப்பிள்ளையினுதனமும், செல்லப்பா துரைராஜாவுக்குரிய ஆதனமும. தெற்கு செலலப்பா துரைராஜாவுககுமுரிய ஆதனமும், ரோட்டும் இதடஙகளும நீர்ப்பாச்சும் யநதிரமும், இவ்வெல்லைகட்குளளடஙகிய செய்பயிர்வகைகளும், பதிவிலக்கம் யாழ்ப்பாணம் காணி பதிவுக் கந்தோர் இல: E. 330/263

வடமாகாணம யாழ்ப்பாணம் டிஸ்திறிக வண்ணார்பண்ணை கோவிற்பற்று வண்ணார்பண்ணை கிழககறை "சேணுதருஜகவளவும் மறுபிரிவுகளும்" பர. நில. இலா. 1-0 குளியுமதைச் சேர்ந்தவைகளுடன் இதற்கெல்லை கிழக்கு கனகசபை கயிலாயநாதனினுதனம வடக்கு ஒழுங்கை மேற்கு தாமோதரம்பிள்ளை பெண் குட்டிப்பிள்ளையனுதனம். தெற்கு தமபு தாமோதரம்பிள்ளைக்கும் பெண் தில்லையம்மாவுககுரியவாதனம் மேற்கு காணியிலிருக்கும் கிணற்றில் பங்கும் அககிணற்றுக்குச் செல்லும் வழிவாய்க்காலுருததும்.

ஷை யூர் 'கப்பனடைப்பும் மருதன் வளவும்' பர நி. இலா. 6 இல மேற்குப் பககமாக இருககும பர. நில. இலா. 3 இல் மேற்குப் பககமாக பர. நில. இலா 0 - 13½ குளி பயிர்வகைகளுடன் இதறகெல்லை கிழக்கும் தெற்கும் சினைப்பு கந்தையாவுககும் பெண்ணுக்குமுரியவாதனம், வடககு ஒழுங்கை, மேற்கு எதரிககுரியவாதனம், பதிவிலக்கம் D 246/5

செ. விசாகரெத்தினம்

133, பருத்தித்துறை ரோட்டு,
நல்லூர் - யாழப்பாணம். 10—3—72

கொமிஷனர், விலைமதிப்பாளர்

எம் 414 17—72

---

வான்முகில் வழாதுபெய்க, மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க
நானமறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்

---

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையாருக்காக, வண்ணார்பண்ணை காங்கேசன்துறைவிதி 450-ம் இலக்கத்திலுள்ள சைவப்பிரகாச யந்திரசாலையில், 2ம் நம் இரண்டாமொழுங்கை பிறவுன் வீதியில் வசிக்கும் திரு. மு. மயில்வாகனம் அவர்களால் 17—3—1972 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

பத்திராதிபர்: திரு. மு. மயில்வாகனம் அவர்கள்